(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **71**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 மே 19, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. மனுக்கள்:**

(1) (i) ஹபராதுவ, ஹருமல்கொட, சென்ரல் பார்க், இல. 35 இல் வதியும் திரு. எச்.ஈ. சாந்தவினது 2015.12.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வந்துரம்ப, இஹல லேல்வல, "சம்பிக்க இல்லம்" இல் வதியும் திரு. கே.ஜி.ஆர். விராஜினது 2015.12.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) தொடந்துவ, பட்டுவத்த, காலி வீதி, இல. 133 இல் வதியும் திரு. டப்ளியூ.ரீ. விஜேசிரியினது 2016.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார்.

(2) மொரட்டுவ, உயன, உயன ஒழுங்கை 11, இல. 11/4 இல் வதியும் திரு. எஃப்.ஏ. பர்னாந்துவினது 2016.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன சமர்ப்பித்தார்.

(3) பட்டபொல, பொல்லெவ்வ, வெத மெதுர, இல. 103 இல் வதியும் திரு. ஏ.எம்.எம்.பி.கே. குலசூரியவினது 2016.01.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பாலித ரங்கே பண்டார சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**2. பாராளுமன்ற அலுவல்கள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. 2016 மே மாதம் 05 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறைநிரப்புத் தொகை – தலைப்பு 240 – நிகழ்ச்சித்திட்டம் 2 தொடர்பிலான தீர்மானம்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— 2016 மே மாதம் 05 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அன்றைய தின ஒழுங்குப் பத்திரத்தின் பிரேரணை முன்னறிவித்தல்கள் மற்றும் தினப்பணிகளின் 1 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டதும் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டதுமான, தலைப்பு 240 – நிகழ்ச்சித்திட்டம் 2 இன் கீழ் ரூபா 55 மில்லியனுக்கான குறைநிரப்புத் தொகை தொடர்பிலான பிரேரணை அன்றைய தினம் விவாதிக்கப்பட்டு பி.ப. 06.30 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற உத்தேசமாயிருந்த போதிலும், உரிய நேரத்திற்கு முன்னர் குறித்த பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பு நடைபெற்றதனால், வாக்கெடுப்பு நடைபெறுகின்றபோதும் மற்றும் பெறுபேறு வெளியிடப்படுகின்றபோதும் தோன்றிய சிக்கலான நிலைமை தொடர்பாக ஆராயப்பட்டதன் பின்னர், இப்பிரேரணை தொடர்பில் மீண்டுமொருமுறை வாக்கெடுப்பு நடத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி) சட்டமூலம்** — இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 10 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**அட்டவணை**

"அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**5. துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை:** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் (3) ஆம் உப பிரிவின் கீழான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்** : நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் ஈதைல் மதுசாரம் தொடர்பில் மது வரியினைத் திருத்தியமைத்தல் மற்றும் ஈதைல் மதுசார இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 மார்ச்சு 02 ஆந் திகதிய 1956/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக. (மதுவரி அறிவித்தல் இலக்கம் 988)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 07ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 07 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் சுற்றிவளைப்பின் போது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முற்பணம் - இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை கண்டுபிடிப்பதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 12,000,000 இலிருந்து ரூபா. 250,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 275,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2) :** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 08ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 08 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வெளியீடுகள் அச்சிடல், விளம்பரம் மற்றும் விற்பனை முற்பணக்கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| விடயம் | | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 3,950,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 2,400,000,000 இலிருந்து ரூபா. 3,000,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 1,900,000,000 இலிருந்து ரூபா. 2,500,000,000 வரை. |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. *ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்* (இல.3)** : நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 09ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 09 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் (வெடி பொருட்கள்) முற்பணக் கணக்கு - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| விடயம் | | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 338,000,000 இலிருந்து ரூபா. 345,000,000 வரை. |

| | |
|---|---|
| (ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4 ):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 10ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 10 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சிய முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| **விடயம்** | **திருத்தம்** |
|---|---|
| (i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |
| (ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,200,000,000 வரை |

| | |
|---|---|
| (iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 1,000,000,000 இலிருந்து ரூபா. 1,500,000,000 வரை |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. *ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்* (இல.5 ):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 11ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 11 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| விடயம் | திருத்தம் |
|---|---|
| (i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 308,000,000 வரை. |
| (ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

| | |
|---|---|
| (iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6)** : நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள 12ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 12 ஆம் இலக்க கட்டளை

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 80,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 80,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2016.04.25 ஆந் திகதி
கொழும்பு 01.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2015 இன் 1ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானமானது, 2014ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## அட்டவணை

### 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2015 தொடர்பில், 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுத்தொடர் இலக்கம். 01

2014 அம் ஆண்டின் 41 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், ரவி கருணாநாயக்க ஆகிய நான் நிதி அமைச்சர் என்ற வகையில், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையை ஆக்குவதுடன், 2015 இன் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மற்றும் 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துதல், அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகள் 12101, 16401, 16501, 19601, 19701 மற்றும் 19801 என்ற விடயங்களுக்கு நேரொத்தவற்றுடன் தொடர்பான இங்கு தரப்பட்ட அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வகையில் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் திருத்தப்படும்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 12101 | 5,500,000 | 30,000,000 | - | - | 15,000,000 | 350,000,000 | 1 |
| 2. | தெற்கு அபிவிருத்தி அமைச்சு | 16401 | 2,000,000 | 0 | 10,000 | 0 | 10,000,000 | 0 | 2 |
| 3. | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு | 16501 | 2,000,000 | 0 | 20,000 | 0 | 10,000,000 | 0 | 3 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 19601 | 4,000,000 | 20,000,000 | - | - | - | - | 4 |
| 5. | திறன் விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில் முயற்சி அமைச்சு | 19701 | 30,000,000 | 10,000,000 | 10,000,000 | 6,000,000 | 90,000,000 | 40,000,000 | 5 |
| 6. | நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு | 19801 | - | - | - | - | 20,000,000 | 23,000,000 | 6 |

( இக்கட்டளைகள் 2015.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

2016 .04.25

கொழும்பு 01 .

ஒப்பம்: ரவி கருணாநாயக்க

நிதி அமைச்சர்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை:** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபை அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

**15. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்:** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

பிரேரணை சபை அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

**16. ஒத்திவைப்பு:** ''இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக " என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 12..15 மணிக்கு, 2016 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப 2016 மே மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.